# FIRST INFORMATION REPORT

முதல் தகவல் அறிக்கை

(Under Section 154 Cr.P.C.)

(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

TAMIL NADU POLICE

INTEGRATED INVESTIGATION FORM-I

C 8109737

1. District : Vellore மாவட்டம் PS: Vigilance & Anti Corruption காவல்நிலையம் Year: 2023 ஆண்டு FIR No.: 3/2023 மு.த.அ. எண் Date: 18.04.2023 நாள்

2. (i) Act சட்டம்: Prevention of Corruption Sections பிரிவுகள்: 7A of PC Act 1988
   (ii) Act சட்டம்: Act 1988 as amended by Sections பிரிவுகள்: as amended by the PC
   (iii) Act சட்டம்: PC (Amendment) Act 2018 Sections பிரிவுகள்: (Amendment) Act 2018
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from நாள் முதல் : 06.04.2023 Date to நாள் வரை : 12.04.2023 and 17.04.2023
   Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் Time to : நேரம் வரை
   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 18.04.2023 Time : நேரம் 16.00 hrs
   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் Volume-II Time : நேரம் 16.00 hrs & 18.30 hrs

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக - Written

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் BPR School & College of Nursing, Filter Bed Road, Vellore 1 Km, North East &
   Beat Number : முறைக் காவல் எண் (b) Address : முகவரி O/o the Deputy Director Health Services, Vellore.
   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் District : மாவட்டம் –

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் K. Saranya (b) Father's/~~Husband~~'s Name : தந்தை / கணவர் பெயர் Karthikeyan
   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு (d) Nationality : நாட்டினம் (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
   Date of Issue : வழங்கப்பட்ட நாள் Place of Issue : வழங்கப்பட்ட இடம்
   (f) Occupation : தொழில் Principal (g) Address : முகவரி BPR School & College of Nursing Filterbed Road, Vellore-1

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary) தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
   Tr. Krishnamoorthi, Block Health Supervisor, O/o the Deputy Director of Health Services, Vellore.

8. Reasons for delay in reporting by the complainant / Informant: குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

GCP-240-34(Type-2) 90,000 Cps.-21.3.16(HCL-12)

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

Separate sheet enclosed

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..........—.......... Rank ..........—......... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.......................—.......................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் .............—............. பதவி .........—.......... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு .......................—......................... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

[signature] 18-04-2023 | [signature] 18.04.2023

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
18.04.2023 @ 19.30 hrs.

Name: பெயர் ......S. VIJAY
Rank: நிலை ....................No. எண் ..........
INSPECTOR OF POLICE
VIGILANCE & ANTI-CORRUPTION,
VELLORE

<u>பணிந்து அனுப்பப்படுகிறது:-</u> வேலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளர் S.விஜய் ஆகிய நான் 18.04.2023-ஆம் தேதி மாலை 16.00 மணியளவில் அலுவலகத்தில் ஆஜரில் இருந்தபோது புகார்தாரர் K.சரண்யா, M.Sc., M.B.A, த/பெ கார்த்திகேயன், முதல்வர், BPR செவிலியர் கல்லூரி, பில்டர்பெட் ரோடு, வேலூர் என்பவர் நேரில் ஆஜராகி கொடுத்த புகாரை பெற்று பார்க்க அதன் விவரம் பின்வருமாறு: அனுப்புநர் K.சரண்யா, M.Sc., M.B.A த/பெ கார்த்திகேயன் முதல்வர், BPR செவிலியர் கல்லூரி, பில்டர்பெட் ரோடு, வேலூர் வீட்டு முகவரி எண். 1, ஸ்ரீராம் நகர், E.B பின்புறம், கம்பர் தெரு, வள்ளலார், வேலூர்-9 பெறுநர் துணைக்காவல் கண்காணிப்பாளர் அவர்கள் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, வேலூர் அய்யா, நான் வேலூர் மாவட்டம், வேலூர் பில்டர்பெட் ரோட்டில் இயங்கி வரும் BPR School & College of Nursing கல்லூரியில் கடந்த 2013 முதல் 2018 ஆம் ஆண்டு வரை பேராசியராக பணிபுரிந்தேன் அதன்பிறகு கடந்த 2018 ஆம் ஆண்டு முதல் தற்போது வரை நர்ஸிங் கல்லூரியின் முதல்வராக பணிபுரிந்து வருகிறேன். BPR School & College of Nursing கல்லூரியானது Dr. Balaji Health & Educational Trust-ன் கீழ் இயங்கி வருகிறது. கல்லூரியின் சேர்மேன் திரு.பாலாஜி ஆவார். எங்களுடைய கல்லூரியில் அரசு உத்தரவின்படி Diploma in General Nursing and Midwifery (DGNM) என்ற செவிலியர் படிப்பில் வருடத்திற்கு 20 மாணவிகள் வீதம் படித்து வருகின்றனர். மேற்படி எங்களுடைய நர்ஸிங் கல்லூரியில் 2023-2024 கல்வியாண்டில் மூன்றாம் ஆண்டு பயின்று வரும் மாணவிகளுக்கு 2 மாதம் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் பயிற்சி பெறுவதற்கு Feasibility Certificate 2023 முதல் 2026 வரை வேண்டியும், எங்களுடைய மனுவினை Directorate of Public Health and Preventive Medicine அனுப்புவதற்காகவும் கடந்த 18.02.2023 அன்று துணை இயக்குனர், சுகாதாரம், வேலூர் அவர்களுக்கு நான் மனு தயார் செய்து அதில் உரிய படிவங்களை இணைத்து தபால் மூலமாக அனுப்பினேன். சுமார் ஒரு வாரம் கழித்து வேலூர் சத்துவாச்சாரி மாவட்ட ஆட்சியர் வளாகத்தில் உள்ள துணை இயக்குனர் சுகாதார பணிகள் (DDHS) அலுவலகத்திற்கு சென்று என்னுடைய மனு சம்மந்தமாக அலுவலகத்தில் இருந்த திரு.பாலசுப்பிரமணியம் என்பவரை சந்தித்து விசாரித்தேன். அதற்கு அவர் நான் உங்களுடைய Feasibility Certificate சம்மந்தமான வேலைகளை பார்க்கவில்லை துணை இயக்குனர் அவர்களின் கட்டுப்பாட்டில் வேலை செய்யும் திரு.கிருஷ்ணமூர்த்தி, BHS அவர்கள் தான் Feasibility Certificate பார்க்கிறார் அவரை பாருங்கள் என்று கூறினார். அடுத்த நாள் அதே அலுவலகத்திற்கு சென்று DDHS அவர்களின் அலுவலகத்தில் திரு.கிருஷ்ணமூர்த்தி அவர்களை சந்தித்து எங்களுடைய நர்ஸிங் கல்லூரியின் மனு சம்மந்தமாக கேட்டதற்கு Sanitation

Certificate-ம் வேண்டும் என்று சொன்னார் அதன்பிறகு கடந்த மார்ச் மாதம் இறுதி வாரத்தில் Sanitation Certificate கேட்டு தபால் தயார் செய்து அதற்கான தொகை ரூ.150/- ஆன்லைனில் செலுத்தி 2023-2026 வரையிலான ஆண்டுகளுக்கு Sanitation Certificate கேட்டு DDHS, Vellore அலுவலகத்தில் நேரடியாக கொடுத்தேன். பிறகு 06.04.2023 அன்று திரு.கிருஷ்ணமூர்த்தி அவர்களுக்கு எங்கள் கல்லூரியின் துணை முதல்வர் திருமதி.பிரியங்கா அவர்கள் போன் செய்து கேட்டபோது முப்பது நாற்பதாயிரம் அலுவலக செலவு உள்ளது அதனால் நீங்கள் உங்கள் கல்லூரியின் சார்பாக கொஞ்சம் ஷேர் பன்னால் போதும் ஒரு நான்கு ஐந்து பேரிடம் பேசிவைத்திருக்கிறேன் பேப்பர் வந்தவர்களிடம் அதனால் நீங்கள் ரூ.10,000/-ம் கொடுத்தால் மட்டும் போதும் என்று கேட்டார். மீண்டும் 12.04.2023 அன்றும் திரு.கிருஷ்ணமூர்த்தி அவர்களுக்கு துணை முதல்வர் திருமதி.பிரியங்கா அவர்கள் போன் செய்து கேட்டபோது நான் ஏற்கனவே கூறியது தான் நிறைய செலவு உள்ளது நீங்கள் ரூ.10,000/- கொடுத்தால் உங்கள் வேலையை முடித்து கொடுக்கிறேன் என்று கூறியுள்ளார். மீண்டும் 15.04.2023 அன்று திரு.கிருஷ்ணமூர்த்தி அவர்களுக்கு நான் போன் செய்து கேட்ட போது 17.04.2023 திங்கட்கிழமை நானே உங்கள் நர்ஸிங் கல்லூரிக்கு நேரில் வந்து பேசுகிறேன் என்று கூறினார். 17.04.2023 அன்று திரு.கிருஷ்ணமூர்த்தி Block Health Supervisor அவர்களுக்கு துணை முதல்வர் திருமதி.பிரியங்கா போன் செய்து கேட்ட போது நான் வேலையாக வெளியில் இருக்கிறேன் மதியம் உங்களுடைய கல்லூரிக்கு நேரில் வருவதாக கூறி, மதியம் சுமார் 01.55 மணிக்கு வந்து துணை முதல்வர் திருமதி.பிரியங்கா அவர்களை சந்தித்து நிறைய செலவு உள்ளது ரூ.10,000/-ஐ நீங்கள் ரெடி பண்ணிட்டு சொல்லுங்கள் இரண்டு நாட்களில் உங்களுடைய வேலையை முடித்து கொடுக்கிறேன் என்று கூறினார் என்னையும் அன்றைய தினம் சந்தித்து பணம் ரூ.10,000/-ம் கொடுங்கள் நான் பேசி உங்கள் வேலையை இரண்டு நாட்களில் முடித்து கொடுக்கிறேன் என்று சொல்லி லஞ்சமாக பணம் கேட்டார். Block Health Supervisor திரு.கிருஷ்ணமூர்த்தி லஞ்சமாக பணம் ரூ.10,000/- கேட்பது சம்மந்தமாகவும் பணம் கொடுக்க எனக்கு விருப்பமில்லை என்றும் லஞ்ச ஒழிப்பு துறையில் புகார் கொடுக்கலாம் என்று எங்கள் நர்ஸிங் கல்லூரியின் சேர்மேன் திரு.பாலாஜி அவர்களுக்கு தெரிவித்தேன் அவரும் பணம் கொடுத்து நாம் Feasibility Certificate வாங்க வேண்டிய அவசியமில்லை நீங்கள் புகார் கொடுக்கலாம் என்றும் நாம் ஏன் லஞ்சமாக பணம் கொடுக்க வேண்டும் என்று கூறினார். எனக்கும் நான் பணி செய்யும் நர்ஸிங் கல்லூரியின் நிர்வாகத்திற்கும் திரு.கிருஷ்ணமூர்த்தி அவர்கள் லஞ்சமாக கேட்கும் பணம் ரூ.10,000/- கொடுக்க விருப்பமில்லாத காரணத்தால் திரு.கிருஷ்ணமூர்த்தி அவர்களை சந்தித்து அவர்கேட்ட

லஞ்ச பணம் ரூ.10,000/-தை கொடுக்கும்போது கையும் களவுமாக பிடித்து அவர் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். மேலும் இந்த புகார் மனுவுடன் திரு.கிருஷ்ணமூர்த்தி அவர்கள் பேசியதை நான் குரல் பதிவு செய்து வைத்திருந்ததின் மெமரி கார்டு, Feasibility Certificate மற்றும் Sanitation Certificate கேட்டு கொடுத்த மனுவின் நகல் ஆகியவற்றை இணைத்துள்ளேன். லஞ்சமாக பணம் ரூ.10,000/-ம் கேட்கும் திரு.கிருஷ்ணமூர்த்தி Block Health Supervisor, O/o. the Deputy Director Health Services, Vellore அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். Sd/- xxxxxxxxx (K.SARANYA) 18-04-2023.

Madam,

Received the complaint on 18.04.2023 at 16.00 Hrs, after verifying the antecedents of the accused and credibility of the complainant by way of conducting confidential enquiry, with the permission of DVAC, Chennai on 18.04.2023 at 18.30 Hrs registered a case in Vellore V&AC Cr.No.03/2023 U/s. 7A of the PC Act 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act 2018. Sd/- xxxxxxxxx 18.04.2023 (S.Vijay) INS/VAC/VL.

The FIR in original along with the complaint with enclosures was sent to Hon'ble CJM and Special Judge, Vellore and sent the other copies to the officers concerned.

**Enclosures :**

1) Tamil typed written Complaint of Tmt. K.Saranya, dated:18.04.2023

2) Attested copy of letter of the Principal, BPR School of Nursing, requesting the order for the community practical training at urban PHC Saidapet & Rural PHC Poigai addressed to the Deputy Director of Health Services, Vellore.(12 sheets)

3) Attested copy of letter of the Principal, BPR School of Nursing, requesting issue sanitation certificate for the academic year 2023-26, addressed to the Deputy Director of Health Services, Vellore along with E-Challan (2 sheets)

4) SanDisk Ultra 16 GB Micro SD Card HC-1 (2245DRFT2144) BL Made in China

18/04/2023
(S.VIJAY)
INSPECTOR OF POLICE
V & A.C, VELLORE.